காஷ்மீரில் தொடரும் தீவிரவாத தாக்குதல்: பாதுகாப்பு படைகள் ஒன்றிணைந்து செயல்பட உள்துறை அமைச்சர் அமித்ஷா உத்தரவு

புதுடெல்லி, ஜூன் 17– ஜம்மு–காஷ்மீரில் தொடர்ந்து நடந்து வரும் தீவிரவாத தாக்குதல்களை கட்டுப்படுத்துவது குறித்து மாநில துணைநிலை ஆளுநர், ராணுவ தலைமை தளபதி மற்றும் உயர்அதிகாரிகளுடன் மத்திய உள்துறைஅமைச்சர் அமித்ஷா ஆலோசனை நடத்தினார். பாதுகாப்பு படைகள் ஒன்றிணைந்து செயல்பட்டு, தீவிரவாதத்தை வேரோடு களைய வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளார்.

காஷ்மீரியின் ரியாசி மாவட்டத்தில் சிவ்கோரி கோயிலுக்கு பேருந்தில் சென்ற பக்தர்களை குறிவைத்து தீவிரவாதிகள் கடந்த 9ம் தேதி தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலில் பேருந்து கட்டுப்பாட்டை இழந்து பள்ளத்தாக்கில் கவிழ்ந்தது. இதில் 10 பேர் உயிரிழந்தனர். 40 பேர் படுகாயமடைந்தனர்.

காஷ்மீரின் கதுவா பகுதி ஹிராநகரில் கடந்த 11ம் தேதி புகுந்த 2 தீவிரவாதிகள் திடீர் தாக்குதல் நடத்தினர். பாதுகாப்பு படையினர் நடத்திய என்கவுன்ட்டரில் ஒரு தீவிரவாதி சுட்டுக் கொல்லப்பட்டார். அடுத்த நாள் மற்றொரு தீவிரவாதி சுட்டுக் கொல்லப்பட்டார்.

அடுத்தடுத்து தாக்குதல்

அதே நாளில், காஷ்மீரின் தோடா பகுதியில் பாதுகாப்பு படையினரின் சோதனை சாவடியை குறிவைத்து தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர். இதில் ஒரு போலீஸ் அதிகாரி உட்பட 6 பேர் காயமடைந்தனர்.

காஷ்மீரில் அடுத்தடுத்து தீவிரவாத தாக்குதல்கள் நடந்ததை தொடர்ந்து, பிரதமர் மோடி தலைமையில் கடந்த 13ம் தேதி உயர்நிலை ஆலோசனை கூட்டம் நடந்தது. இதில், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் உள்ளிட்ட அதிகாரிகள் பங்கேற்றனர். இதன் தொடர்ச்சியாக, காஷ்மீர் தாக்குதல்கள் குறித்து ஆலோசிக்கும் வகையில், மத்திய உள்துறைஅமைச்சர் அமித்ஷா தலைமையில் டெல்லியில் நேற்று உயர்நிலை ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இதில், காஷ்மீர் துணைநிலை ஆளுநர் மனோஜ் சின்ஹா, ராணுவ தலைமை தளபதி மனோஜ் பாண்டே, புதிய ராணுவ தளபதியாக பதவியேற்க உள்ள உபேந்திர திவேதி, உள்துறை மூத்த அதிகாரிகள், காஷ்மீர் காவல் துறை அதிகாரிகள், உளவுத் துறை அதிகாரிகள் பங்கேற்றனர்.

ஒன்றிணைந்து தீவிரவாதத்தை வேரோடு களைய வேண்டும்

இக்கூட்டத்தில் அமித் ஷா பேசியதாவது:– பிரதமர் மோடி தலைமையிலான அரசு காஷ்மீரில் தீவிரவாதத்தை கட்டுப்படுத்தி உள்ளது. குறிப்பாக, காஷ்மீர் பள்ளத்தாக்கு, ஜம்மு பகுதியில் தீவிரவாத தாக்குதல்கள் கணிசமாக குறைந்துள்ளன. தீவிரவாதம் மூலம் இந்தியா மீது மறைமுகமாக போர் தொடுக்கப் படுகிறது. இந்த போரை முழுமையாக முறியடிப்போம். காஷ்மீரில் மத்திய பாதுகாப்பு படைகள் ஒன்றிணைந்து செயல்பட்டு, தீவிரவாதத்தை வேரோடு களைய வேண்டும். காஷ்மீரில் மக்களவை தேர்தல் வெற்றிகரமாக நடத்தப்பட்டது. வாக்குப்பதிவு சதவீதமும் கணிசமாக அதிகரித்துள்ளது. தேர்தல் அமைதியாக நடைபெற நடவடிக்கை எடுத்த பாதுகாப்பு படையினருக்கு பாராட்டுகள்.

இவ்வாறு அமித்ஷா பேசினார்.

யோகா தினத்தையொட்டி பிரதமர் மோடி, காஷ்மீர் வருவதாலும், அமர்நாத் புனித யாத்திரை தொடங்க உள்ளதாலும், காஷ்மீரில் பாதுகாப்பு ஏற்பாடுகளை பலப்படுத்துமாறு அதிகாரிகளுக்கு அமித்ஷா உத்தரவிட்டார். இதுகுறித்து பாதுகாப்பு துறை வட்டாரங்கள் கூறியதாவது:

மோடி தலைமையில் பிரம்மாண்ட யோகா

பிரதமர் மோடி 20ம் தேதி ஸ்ரீநகர் செல்கிறார். மறுநாள் 21ம் தேதி உலக யோகா தினத்தை முன்னிட்டு பிரதமர் தலைமையில் ஸ்ரீநகர் தால் ஏரி பகுதியில் பிரம்மாண்ட யோகா நிகழ்ச்சி நடக்கிறது. இதில் 6,000க்கும் மேற்பட்டோர் பங்கேற்கின்றனர்.

இதையொட்டி, காஷ்மீரில் கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யுமாறு மாநில காவல் துறை அதிகாரிகளுக்கு அமைச்சர் அமித்ஷா உத்தரவிட்டுள்ளார். அதன்படி, யோகா தின நிகழ்ச்சி நடைபெறும் இடத்தில் உச்சகட்ட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படும். ஸ்ரீநகர் முழுவதும் இப்போதே பாதுகாப்பு படைகளின் கண்காணிப்பு வளையத்துக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

காஷ்மீரில் அமர்நாத் புனித யாத்திரை வரும் 29ம் தேதி தொடங்க உள்ளது. கடந்த ஆண்டு 4.28 லட்சம் பக்தர்கள் அமர்நாத் பனிலிங்கத்தை வழிபட்டனர். இந்த ஆண்டு 5 லட்சத்துக்கும் மேற்பட்டோர் யாத்திரை மேற்கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, கூடுதல் படைகளை குவித்து, பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்யுமாறு அமைச்சர் உத்தரவிட்டுள்ளார். அதன்படி, புனித யாத்திரை வழித்தடங்களில் சிஆர்பிஎப், சிஐஎஸ்எப், ஐடிபிபி, பிஎஸ்எப் படைகளின் வீரர்கள் பாதுகாப்பு பணியில் ஈடுபடுவார்கள்.

யாத்திரை செல்லும் பக்தர்களுக்கு சிறப்பு ஸ்மார்ட் அட்டை வழங்கப் படும். இதன்மூலம் அவர்களது இருப்பிடத்தை துல்லியமாக அறியலாம். அசம்பாவிதம் நேரிட்டால் பாதுகாப்பு படையினர் உடனடியாக அங்கு விரைந்து செல்ல முடியும். அடிவார முகாம் முதல் பனிலிங்க குகை வரை 500 கம்பெனி படைகளை சேர்ந்த வீரர்கள் பாதுகாப்பு பணியில் ஈடுபடுவார்கள். இவ்வாறு பாதுகாப்பு துறைவட்டாரங்கள் தெரிவித்தன.

நாடாளுமன்ற வளாகத்தில் தலைவர்கள் சிலைகளுக்காக புதிய பூங்கா: துணை ஜனாதிபதி திறந்து வைத்தார்

புதுடெல்லி, ஜூன்.17– நாடாளுமன்ற வளாகத்தில் விடுதலை போராட்ட வீரர்கள் மற்றும் தலைவர்களின் சிலைகள் ஆங்காங்கே நிறுவப்பட்டு இருந்தன. அவற்றை ஒரே இடத்தில் வைத்து பூங்காவாக பராமரிக்க மத்திய அரசு முடிவு செய்தது.

அதன்படி மகாத்மா காந்தி, அம்பேத்கர், சத்ரபதி சிவாஜி உள்ளிட்ட தலைவர்களின் சிலைகள் சமீபத்தில் இடமாற்றம் செய்யப்பட்டு ஒரே இடத்தில் நிறுவப்பட்டன.

இதற்கு எதிர்க்கட்சிகள் கண்டனம் தெரிவித்தன. ஆனால் தலைவர்களின் பங்களிப்பை ஒரே இடத்தில் மக்கள் பார்த்து தெரிந்து கொள்ள வசதியாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக மத்திய அரசு தெரிவித்து இருந்தது.

இந்த நிலையில் நாடாளுமன்ற வளாகத்தில் தலைவர்கள் சிலைகள் அமைக்கப்பட்ட இந்த புதிய பூங்கா (பிரேர்ணா ஸ்தால்) நேற்று திறக்கப்பட்டது.

இதை துணை ஜனாதிபதியும், மாநிலங்களவை தலைவருமான ஜெகதீப் தன்கர் திறந்துவைத்தார்.

நாடாளுமன்ற வளாகத்தை பார்வையிடும் மக்களுக்கு இந்த பூங்கா ஊக்கமும், உத்வேகமும் அளிக்கும் என அவர் கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் முன்னாள் சபாநாயகர் ஓம் பிர்லா, மாநிலங்களவை துணைத்தலைவர் ஹரிவன்ஷ், மத்திய மந்திரிகள் கிரண் ரிஜிஜு, அர்ஜுன் ராம் மெக்வால், எல்.முருகன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

நீட் தேர்வை ரத்து செய்ய வேண்டும்: அகிலேஷ் யாதவ் வலியுறுத்தல்

லக்னோ, ஜூன் 17– நீட் தேர்வில் முறைகேடு நடைபெற்றதாக சர்ச்சை எழுந்த நிலையில், 'நீட் தேர்வை ரத்து செய்ய வேண்டும் என்பதே ஒரே நாடு ஒரே கோரிக்கை' என உத்திர பிரதேச முன்னாள் முதல்வரும், சமாஜ்வாதி கட்சி தலைவருமான அகிலேஷ் யாதவ் தெரிவித்துள்ளார்.

கடந்த மே 5ம் தேதி நடந்த நீட் தேர்வில் கேள்வித்தாள் கசிந்தது, குறிப்பிட்ட சில தேர்வு மையங்களில் மட்டும் மாணவர்களுக்கு கருணை மதிப்பெண் வழங்கியது,

இதுவரை இல்லாத அளவாக 67 பேர் 720க்கு 720 மதிப்பெண் பெற்றது, அதிகளவு மாணவர்கள் அதிக மதிப்பெண் பெற்றது என பல முறைகேடுகள் நடந்து உள்ளதாக குற்றஞ்சாட்டப் பட்டுள்ளது.

இந்தாண்டு நடத்தப்பட்ட 'நீட்' தேர்வை ரத்து செய்து, புதிதாக நுழைவுத் தேர்வு நடத்தக் கோரியும், இந்த விவகாரம் தொடர்பாக சி.பி.ஐ. அல்லது நீதிமன்ற கண்காணிப்பில் விசாரணை நடத்த உத்தரவிடக் கோரியும், மாணவர்கள் சிலர் சார்பில் சுப்ரீம் கோர்ட்டில் புதிய வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், 'நீட் தேர்வை ரத்து செய்ய வேண்டும் என்பதே ஒரே நாடு ஒரே கோரிக்கை' என உத்தரபிரதேச முன்னாள் முதல்வரும், சமாஜ்வாதி கட்சி தலைவருமான அகிலேஷ் யாதவ் தெரிவித்துள்ளார்.

9.26 கோடி விவசாயிகளுக்கு ரூ.20,000 கோடி நிதி: வாராணசியில் நாளை வழங்குகிறார் பிரதமர் மோடி

புதுடெல்லி, ஜூன் 17– பி.எம். கிசான் திட்டத்தின் கீழ் நாடு முழுவதும் உள்ள 9.26 கோடி விவசாயிகளுக்கு 17வது தவணையாக ரூ.20,000 கோடி நிதியை பிரதமர் மோடி நாளை (18ம் தேதி) வழங்குகிறார்.

நாடாளுமன்ற தேர்தலில் வெற்றிபெற்ற பிரதமர் மோடி, தொடர்ந்து 3வது முறையாக கடந்த 9ம் தேதி பதவியேற்றார். அதன்பின் அவர் முதல் கையெழுத்தாக பிஎம்கிஷான் திட்டத்தின் 17வது தவணையை விடுவிக்கும் கோப்பில் கையெழுத் திட்டார்.

இத்திட்டத்தின் கீழ் விவசாயி கள் விவசாய பணியை மேற்கொள்ள ஆண்டுக்கு ரூ.6,000 3 தவணையாக அவர்களது வங்கி கணக்கில் நேரடியாக செலுத்தப்படுகிறது.

பிரதமர் மோடி நாளை மாலை தனது சொந்த தொகுதியான வாரணாசிக்கு செல்கிறார். இங்கு நடைபெறும் நிகழ்ச்சியில் பி.எம் கிஷான் திட்டத்தின் 17வது தவணைத் தொகை ரூ.20,000 கோடியை பிரதமர் விடுவிக்கிறார். இதன் மூலம் நாட்டில் உள்ள 9.26 கோடி விவசாயிகள் பயனடைவர்.

மேலும் விவசாய பணிகளில் உதவி செய்வதற்காக சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த 30,000க்கும் மேற்பட்ட பெண்களுக்கு டிரோன்கள் மூலம் விவசாய நிலங்களில் மருந்து தெளிப்பது உள்ளிட்ட பல பயிற்சிகள் ஊரக மேம்பாட்டு அமைச்சகத்தின் உதவியுடன் அளிக்கப்பட்டுள்ளன. இவர்கள் 'கிரிஷி சக்திகள்' என அழைக்கப்படுகின்றனர். அவர்களுக்கு பிரதமர் மோடி சான்றிதழ்களை வழங்குகிறார். இத்திட்டத்தின் கீழ் குஜராத், தமிழ்நாடு, உத்தர பிரதேசம், மத்திய பிரதேசம், சத்தீஸ்கர், கர்நாடகா, மகாராஷ்டிரா, ராஜஸ்தான், ஒடிசா, ஜார்க்கண்ட், ஆந்திர பிரதேசம், மற்றும் மேகாலயாவில் மொத்தம் 90,000 பெண்களுக்கு பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில் உத்தர பிரதேச கவர்னர் ஆனந்திபென் படேல், முதல்வர் யோகி ஆதித்யநாத் உட்பட பலர் கலந்து கொள்கின்றனர்.

இது குறித்து மத்திய வேளாண் அமைச்சர் சிவராஜ் சிங் சவுகான் கூறியதாவது:

பிரதமர் மோடியின் கடந்த 2 ஆட்சியில் வேளாண்மைக்கு முக்கியம் அளிக்கப்பட்டுள்ளது. விவசாயிகளின் நலனுக்காக பல முக்கிய முடிவுகளை பிரதமர் மோடி எடுத்தார். பிஎம் கிஷான் திட்டம் கடந்த 2019ம் ஆண்டு தொடங்கப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் இதுவரை நாட்டில் உள்ள 11 கோடிக்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு ரூ.3.04 லட்சம் கோடிக்கு மேல் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அமைச்சர் சிவராஜ் சிங் சவுகான் கூறினார்.

SBFC **எஸ்பிஎப்சி பைனான்ஸ் லிமிடெட்**

பதிவு அலுவலகம் : யூனிட் எண்.103, முதல் தளம், C&m ஸ்கொயர், சங்கம் காம்ப்ளக்ஸ், சிடிஎஸ் எண். 95ஏ, 127 அந்தேரி குர்லா சாலை, கிராமம் சகாலா, அந்தேரி (கிழக்கு), மும்பை – 400 059 I Telephone: +9122678753001
Fax: +912267875334 I www.SBFC.com I Corporate Identity Number: U67190MH2008PTC178270

பொது அறிவிப்பு

25.06.2024 அன்று காலை 10:30 மணிக்கு எஸ்பிஎப்சி பைனான்ஸ் பிரைவேட் லிமிடெட் மூலம் அடகு வைக்கப்பட்ட தங்க ஆபரணங்களின் ஏலம் **கீழே குறிப்பிட்டுள்ள கிளை முகவரியில்** நடத்தப்படும் என்பதை பொதுமக்களுக்கு இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது. ஏலம் விடப்படும் தங்க ஆபரணங்கள், தங்கள் நிலுவைத் தொகையைச் செலுத்தத் தவறிய எங்களது பல்வேறு வாடிக்கையாளர்களின் கடன் கணக்குகளைச் சேர்ந்தவை. இந்த கடன் வாங்கியவர்களுக்கு எங்கள் ஏல அறிவிப்புகள் முறையாக வழங்கப்பட்டுள்ளன. ஏலம் விடப்படும் தங்க ஆபரணங்கள் கிளையின் பெயருடன் கீழே குறிப்பிடப்பட்டுள்ள எங்கள் பல்வேறு வாடிக்கையாளர்களின் காலாவதியான கடன் கணக்குகளுக்கு சொந்தமானது.

கிருஷ்ணகிரி கிளை முகவரி : எஸ்பிஎப்சி பைனான்ஸ் லிமிடெட், கதவு எண். Mig-82, **நியூ ஹவுசிங் பிளாக் 1, கட்டிகானப்பள்ளி, கிருஷ்ணகிரி** 535 002, AP00565196, AP00576334, AP00584181, AP00586281, AP00595465, AP00596489, AP00597053, AP00613149, AP00613646, AP00615068, AP00615508

மடிப்பாக்கம் கிளை முகவரி : எஸ்பிஎப்சி பைனான்ஸ் லிமிடெட், எண்.எஸ்பிஎப்சி,மனை எண்.1 & 2, முதல் தளம், மேடவாக்கம் பிரதான சாலை, மடிப்பாக்கம் கூட்டு ரோடு, மடிப்பாக்கம், சென்னை 600 091, AP00079691, AP00180124, AP00363437, AP00398545, AP00547025, AP00547180, AP00549861, AP00557293, AP00557720, AP00598178, AP00604445

புதுச்சேரி கிளை முகவரி : எஸ்பிஎப்சி பைனான்ஸ் லிமிடெட், எம் பத்மினி வளாகம், ஏர்செல் கட்டிடம், சர்வே எண். 6, பழைய எண். 12, 100 அடி ரோடு, எல்லைப் பிள்ளைச் சாவடி, எச்டிஎப்சி வங்கிக்கு அடுத்தது, இசிஆர் சாலை, பாண்டிச்சேரி, இந்தியா –605008, AP00278430, AP00467363, AP00468484

சேலம் கிளை முகவரி : எஸ்பிஎப்சி பைனான்ஸ் லிமிடெட், 171/2, 1வது தளம், சூரமங்கலம் மெயின் ரோடு, திருவாகவுண்டனூர், சேலம், தமிழ்நாடு 636005, AP00586781, AP00587071, AP00587237

மேலும் விவரங்களுக்கு, எஸ்பிஎப்சி பைனான்ஸ் பிரைவேட் லிமிடெட் தொடர்பு எண்(கள்) 18001028012**ல் தொடர்பு கொள்ளலாம்: (ஏலத்தில் விடப்பட வேண்டிய கணக்குகளின் எண்ணிக்கையை மாற்றவும், எந்த முன் அறிவிப்பும் இல்லாமல் ஏலத்தை ஒத்திவைக்கவும் / ரத்து செய்யவும் எஸ்பிஎப்சி பைனான்ஸ் பிரைவேட் லிமிடெட்டுக்கு உரிமை உள்ளது.)**

விண்வெளி குப்பைகளுக்கு தீர்வு: 'ஆர்.எல்.வி. புஷ்பக்' ராக்கெட்டின் 3ம் கட்ட சோதனைக்கு இஸ்ரோ தயார்

இந்திய விண்வெளித்துறை சர்வதேச தரத்திற்கு உயரும்

சென்னை, ஜூன்.17– விண்வெளி குப்பைகளுக்கு விடை கொடுப்பதற்காக 'ஆர்.எல்.வி. புஷ்பக்' ராக்கெட்டின் 3ம் கட்ட சோதனைக்கு இஸ்ரோ தயாராகி வருவதாக விஞ்ஞானிகள் கூறினர்.

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம்(இஸ்ரோ) விண்வெளித்துறையில் ஐரோப்பிய நாடுகள் செய்ய முடியாத செயல்களை கூட இஸ்ரோ எளிதாக செய்து முடித்து, அனைத்து நாட்டு விண்வெளித்துறையையும் வியப்புக்கு உள்ளாக்கி வருகிறது. குறிப்பாக, சூரியன் ஆய்வுக்காக ஆதித்யா எல்1, எவரும் இறங்காத நிலவின் தென் துருவத்தில் சந்திரயான்–3 விண்கலத்தை வெற்றிகரமாக இறக்கி சாதனை படைத்து உள்ளது. இருந்தாலும், விண்வெளி துறையில் சாதிக்க வேண்டிய இலக்கு இன்னும் அதிகம் உள்ளது.

விண்வெளி துறையை பொறுத்த அளவில் 4 வகையான சுற்றுவட்ட பாதைகள்(ஆர்பிட்கள்) இருக்கின்றன. இதில், வானிலையை கண்காணிக்க பயன்படுத்தப்படும் செயற்கைக்கோள் முதலாவதாக உள்ள பூமியில் இருந்து 35 ஆயிரத்து 786 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள புவிசார் சுற்றுப்பாதையில் ஒரே இடத்தில் நிலை நிறுத்தப்படுகிறது. இந்த செயற்கைக்கோள் பூமியை சுற்றாது, பூமி சுற்றும்போது அதுவும் சேர்ந்து சுற்றுகிறது. மாறாக இந்திய நிலப்பரப்பை பார்த்தவாறு இந்த செயற்கைக்கோள் இருப்பதால் முழுகவனமும் இந்தியா மீது மட்டுமே இருக்கும்.

எனவே வானிலை மாற்றத்தை துல்லியமாக இதனால் கண்காணிக்க முடியும். அதேபோல தொலைதொடர்புக்கும் இது பயன்படுகிறது. இதற்கு அடுத்து உள்ள சுற்றுவட்ட பாதை, பூமியில் இருந்து 160 கிலோ மீட்டரில் தொடங்கி 2 ஆயிரம் கிலோ மீட்டர் தொலைவில் உள்ள பூமியின் தாழ் வட்டப்பாதையாகும்.

இங்குதான் அதிகளவில் செயற்கைகோள்கள் நிலை நிறுத்தப்படுகிறது. இங்கு ஏவுவதற்கு 88 நிமிடங்களிலிருந்து 127 நிமிடங்கள் வரை ஆகிறது. அதேபோல், விண்வெளி நிலையங்களும் இங்குதான் கட்டமைக்கப்பட்டுள்ளன.

முதல் மற்றும் 2வது சுற்றுப்பாதையின் இடையில் உள்ள தொலைவில், 3வதாக இருப்பது நடுத்தர பூமி சுற்றுப்பாதையாகும். பூமியில் இருந்து 600–700 கிலோ மீட்டர் தொலைவில் இருப்பது 4வது சுற்றுப்பாதையான சூரியன் ஒத்திசைவான சுற்றுப்பாதையாகும். இந்த 4 சுற்றுவட்டப்பாதையில் செயற்கைகோள்களை நிலைநிறுத்த அனுப்பப்படும் ராக்கெட் திரும்பி வருவதில்லை. இதில் சிறுபாகம் கடலில் விழுகிறது. மீதி உள்ள பாகங்கள் குப்பைகளாக பூமியை சுற்றிவர தொடங்குகிறது.

இவ்வாறு சுற்றிவரும் ஸ்பேஸ் குப்பைகள் செயற்கைக்கோள்கள் மீது மோதி சேதப்படுத்துவதுடன், விண்வெளி ஆய்வில் ஈடுபடும் விண்வெளி வீரர்கள் மீது மோதி உயிரிழப்பையும் ஏற்படுத்த வாய்ப்புள்ளது. அத்துடன் ராக்கெட் ஏவும்போது குப்பைகள் குறுக்கிடுவதால், ராக்கெட் ஏவப்படும் நேரம் கடைசி நேரத்தில் மாற்றி அமைக்கப்படுகிறது. இந்த குப்பைகளை குறைக்க, மீண்டும், மீண்டும் ஒரே ராக்கெட்டை பயன்படுத்தும் முறையை கொண்டு வர விஞ்ஞானிகள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர்.

அதன்படி வடிவமைக்கப்பட்டு பயன்பாட்டுக்கு வந்தது 'பால்கன்' ராக்கெட் ஆகும். இது செயற்கைக்கோள்கள் மட்டுமல்லாது மனிதர்களையும் விண்ணிற்கு கொண்டு சென்று மீண்டும் பத்திரமாக தரையிறங்கும் வகையிலும் பலமுறை பயன்படுத்தும் வகையிலும் வடிவமைக்கப்பட்டுள்ளது. விண்வெளித்துறையில் ஈடுபட்டுள்ள மற்ற நாடுகளும் இதனை உருவாக்க முயற்சிக்கின்றன. அந்த வரிசையில் இஸ்ரோ தற்போது இந்தவகை ராக்கெட்டை உருவாக்கி உள்ளது. இந்த ராக்கெட் விண்வெளியில் செயற்கைக்கோளை திட்டமிட்ட இலக்கில் நிலைநிறுத்திவிட்டு மீண்டும் பூமிக்கு திரும்பி வந்து விடுகிறது.

இந்த விமானத்திற்கு 'ஆர்.எல்.வி. புஷ்பக்' என்று பெயரிடப்பட்டிருக்கிறது. இந்த ராக்கெட் ஏற்கனவே 2 முறை கர்நாடகா மாநிலம் சல்லகெரே வில் உள்ள ஏரோநாட்டிக்கல் சோதனைத் தளத்தில் வெற்றிகரமாக சோதனை முடிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து 3ம் கட்ட சோதனைக்கு விஞ்ஞானிகள் தயாராகி வருகின்றனர். இந்த சோதனையில் சினூக் ஹெலிகாப்டர் பயன்படுத்தபட இருக்கிறது. இது பயன்பாட்டுக்கு வரும்பட்சத்தில் சர்வதேச தரத்திற்கு இந்திய விண்வெளித்துறை உயர்ந்திருப்பதுடன், விண்வெளி குப்பைகளுக்கு விடை கொடுப்பதாகவும் அமையும்' என்று இஸ்ரோ விஞ்ஞானிகள் கூறினர்.

ஷிவாலிக் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்.
பதிவு அலுவலகம் : 501, சல்கான் ஆரம், ஜசோலா மாவட்ட மையம், புதுடெல்லி –110025
CIN : U65900DL2020PLC366027

ஏல அறிவிப்பு

வங்கியினால் வழங்கப்பட்ட தனிப்பட்ட அறிவிப்புகள் உட்பட பல்வேறு கோரிக்கைகள் மற்றும் அறிவிப்புகள் அனுப்பியபோதிலும், வங்கியிடமிருந்து பெற்ற தங்க நகை கடன்/கள் அவர்களால் சரி செய்யப்படவில்லை என்பதை ஷிவாலிக் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்டின் கீழ்க்கண்ட கடன்தாரர்களுக்கு இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறோம். வங்கியில் செக்யூரிட்டியாக வைக்கப்பட்டுள்ள தங்க நகைகளை ஏலம் விட முடிவு செய்யப்பட்டுள்ளது, அதன்படி 27.06.2024 அன்று மாலை 3:00 மணிக்கு கடன் பெற்ற கிளை வளாகத்தில் ஏலம் விடப்படும் என்று அனைத்து கடன்தாரர்களுக்கும் இதன் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏல விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின்படி கடன் வாங்கியவர்கள், கணக்கு வைத்திருப்பவர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட அனைவரும் ஏலத்தில் பங்கேற்கலாம்.

கிளை	கணக்கு எண்	கணக்கு வைத்திருப்பவர் பெயர்	தந்தை/ மனைவி பெயர்	முகவரி	கணக்கு துவக்க தேதி	செலுத்த வேண்டிய தொகை
சென்னை	104142510131	அன்பு ஜடையன்	த/பெ. ஜடையன்	எண் 4 186, கொண்டப்பநாயக்கன்பட்டி நரியனேரி வேலூர் திருப்பத்தூர் தமிழ்நாடு 635901	20/01/2024	202,121.77
சென்னை	104142510096	காயத்ரி பி	த/பெ. பெருமாள்	64/5, கங்கையம்மன் கோவில் தெரு, சண்முகா நகர் அயப்பாக்கம், மாதிரைவேடு, திருவேற்காடு திருவள்ளூர்தமிழ்நாடு 600077	11/01/2024	214,343.20
சென்னை	104142510143	ஜி உமாலக்ஷ்மி	த/பெ. ராமு	32/29, கால்வாய் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை தமிழ்நாடு 600005	24/01/2024	145,535.61
சென்னை	104142510144	ஜெயக்குமார் டி	த/பெ. துரைராஜ்	A–5, 101, 31/33, பிரின்ஸ் கிராமம், இளைய தெரு தண்டையார்பேட்டை, சென்னை, தமிழ்நாடு 600081	24/01/2024	190,116.04
சென்னை	104142510147	ஜி எஸ் பியூலா	த/பெ. யேசுதாஸ்	எண்.6 ஏ, 7வது குறுக்குத் தெரு, தென்றல் நகர் மேற்கு, திருமுல்லைவாயல், திருவள்ளூர் திருவள்ளூர் தமிழ்நாடு 600062	25/01/2024	100,577.21
சென்னை	104142510195	தனலட்சுமி ஜி	த/பெ. குணசேகரன்	எண். 23, நேதாஜி தெரு காமராஜுநகர், நந்தவன மேட்டூர், திருவள்ளூர் தமிழ்நாடு 600071	07/02/2024	125,659.92
சென்னை	104142510217	மாரிமுத்து ராஜேந்திரன்	த/பெ. ராஜேந்திரன்	48, பஜனை கோயில் தெரு, கருமாரப்பட்டி கோதண்டவாடி, திருவண்ணாமலை, திருவண்ணாமலை தமிழ்நாடு 606752	12/02/2024	211,872.98
சென்னை	104142510245	விமல்ராஜ் எம்	த/பெ. முருகதாஸ்	A3, முல்லை பிளாட்ஸ், சோழன் நகர் A3 கெருகம்பாக்கம், கொளப்பாக்கம், காஞ்சிபுரம் தமிழ்நாடு 600128	15/02/2024	366,813.20
சென்னை	104142510061	செல்வநாயகம் பாண்டியராஜ்	C/o. பாண்டிராஜ்	எண்.1871 வசந்தம் காலனி 4வது தெரு அண்ணா நகர் மேற்கு சென்னை தமிழ்நாடு 600040	06/01/2024	36,376.16
சென்னை	104142510390	செல்வநாயகம் பாண்டியராஜ்	C/o. பாண்டிராஜ்	எண்.1871 வசந்தம் காலனி 4வது தெரு அண்ணா நகர் மேற்கு சென்னை தமிழ்நாடு 600040	19/03/2024	74,667.06
சென்னை	104142510214	சஞ்சய்	த/பெ. குணசேகரன்	47/22, பி.வி. கோயில் தெரு ராயபுரம், ராயபுரம், சென்னை தமிழ்நாடு 600013	10/02/2024	34,742.36
சென்னை	104142510213	சஞ்சய்	த/பெ. குணசேகரன்	47/22, பி.வி. கோயில் தெரு ராயபுரம், ராயபுரம், சென்னை தமிழ்நாடு 600013	09/02/2024	201,699.34

ஏல தேதி 27.06.2024 அன்று மாலை 3.00 மணி

எந்தவொரு முன்னறிவிப்பும் இன்றி ஏலத்தில் இருந்து எந்தவொரு கணக்கையும் நீக்க அல்லது ஏலத்தை ரத்து செய்ய வங்கிக்கு உரிமை உள்ளது.
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, ஷிவாலிக் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்.